

கன்னியாகுமரி மாவட்டம் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட கூவைக்காடு காணிகிராமம் வனப்பகுதி கிராம பொதுமக்களிடம் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.முகம்மது நஜீம்முதீன்,இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு குறைகளை கேட்டறிந்தார்.

செ.வெ.எண். 929 /2017 நாள் 07.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**பள்ளகுளம், கீறிப்பாறை, மாராமலை வனபகுதி, காளிகேசம், கூவைக்காடு, கானிகிராமம், குலசேகரம், களியல், வேளிமலை போன்ற வனப்பகுதிகளில் மரங்களை அகற்றும் பணிகளில் 300 வன பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**

**சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு. முகம்மது நஜீம்முதீன் இ.ஆ.ப, அவர்கள் தகவல்.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பள்ளகுளம், கீறிப்பாறை, மாராமலை வனபகுதி, காளிகேசம், கூவைக்காடு, கானிகிராமம், தடிக்காரன்கோணம், குலசேகரம், களியல், வேளிமலை போன்ற வனப்பகுதிகளில் மரங்களை அகற்றும் பகுதிகளை சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.முகம்மது நஜீம்முதீன் இ.ஆ.ப, அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதி மக்களிடம் பேசும்போது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனப்பகுதிகளான கீறிப்பாறை, பாலமோர் போன்ற பகுதிகளில் இரப்பர் கழக ஆராய்ச்சிக்கு சொந்தமான மரங்களை அகற்றப்பட்டு வருகின்றன. சில பகுதிகளில் மரங்களினால் மின்விநியோகம் பாதிக்கப்பட்ட பகுதிகளை கண்டறிந்து, உடனடியாக வனத்துறை மூலமாக மரங்கள் அகற்றப்பட்டு, மின்விநியோகம் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

வனப்பகுதிகளில் செல்லும் கிராமச்சாலைகள் சீரமைக்க, வனத்துறையை சார்ந்த 300-க்கும் மேற்பட்ட பணியாளர்கள், 10 ஜே.சி.பி, 5 பொக்லைன் வாகனங்கள் மூலமாக வாகன சாலையில் உள்ள மரங்களை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று, பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

சில வனப்பகுதியில் தொடர்ந்து மரங்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று, இன்னும் ஒரு சில தினங்களில் முழுவதும் அகற்றப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.முகம்மது நஜீம்முதீன் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**